**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண். 111/2023**

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் வெள்ளி கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சரோஜா | க/பெ.: | வைத்தியநாதன் |
| கிராமம்: | கீழபாண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | வீட்டுகுடித்தனம் |
| வயது: | 65 | முகவரி: | கீழபாண்டி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 23.01.2026.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் 4ம் வாதி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை மற்ற வாதிகளின் சார்பாக நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நாங்கள் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 25.06.1975–ல் வைத்தியலிங்க தேவர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 04.11.1978–ல் தர்மதுரை பேரில் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 23.12.2020–ல் 4 முதல் 6 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 28.12.2020–ல் 4ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதி பேரில் ஏற்டுத்திய அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும். 22.03.2021–ல் 4ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு

எழுதிக்கொடுத்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 24.12.2020–ல் வாதிகள் அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 28.12.2020–ல் 4ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.7** ஆகும். 28.12.2020–ல் 5ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.8** ஆகும். 28.12.2020–ல் 6ஆம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.9** ஆகும். 27.03.2021–ல் வில்லங்க சான்று கணினி நகல் **வா.சா.ஆ.10** ஆகும். 24.03.2021–ல் பிச்சன்கோட்டகம் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று அசல் தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**7ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது:–**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.